தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (10.10.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நீர்வளத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவின் தலைவர் இரா.சுப்பிரமணியன், நீர்வளத் துறையின் சிறப்புச் செயலாளர் சு. ஸ்ரீதரன், நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சு.கோபாலகிருஷ்ணன் மற்றும் நீர்வளத் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

16 இலட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு!

தமிழ்நாட்டில் 24 இலட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள்!

கோவா – தென்னை வளர்ச்சி கருத்தரங்கில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

கோவா, அக். 12-

கோவா மாநிலத்தில் நேற்று முன்தினம் (10.10.2025) நடைபெற்ற தென்னை வளர்ச்சி கருத்தரங்கில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் ஆற்றிய உரை வருமாறு:

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு விவசாயத்திற்கு கென்று தனி பட்ஜெட் அறிவித்து ஆண்டு தோறும் கிட்டத்தட்ட 50,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழ்நாட்டின் விவசாயிகளின் பெருங்குடி மக்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இருந்த சூழ்நிலை கடந்த காலத்தில் இருந்தது. தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்ககளின் தலைமையிலான அரசினால் உழவர்களின் நலன் காக்கும் பொருட்டு பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்துவதன் மூலம் இப்பொழுது அதுமாதிரியான சூழ்நிலைகள் தமிழ்நாட்டில் அறவே இல்லை. அந்தளவிற்கு நெல் உற்பத்தியை அதிகமாக செய்து கொண்டிருறோம். அதேபோல தென்னை, சிறு தானியங்கள் உற்பத்தியிலும் முன்னேற்றம் அடைந்து வருகிறோம். முந்திரி உற்பத்தியில் சிறந்து விளங்கிட தனியாக முந்திரி வாரியம் அமைத்து அதற்குரிய உதவிகளையும் செய்து கொண்டிருக்றோம்.

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் தொடர்ந்து வழங்குவது தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் என்பதில் பெருமைபடுகிறேன். இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து புதியதாக 2 இலட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு மின் கட்டணம் என்பது பெரும்சுமையாக உள்ளது. எனவே, தமிழ்நாட்டில் 24 இலட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு, அதற்கான மின்கட்டணம் ரூபாய் 34,000 கோடியை முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசே செலுத்திவருகிறது.

அதேபோல விவசாயிகளுக்கு இயற்கை இடர்பாடுகள் மூலமாக ஏற்படுகின்ற பயிர் சேதத்திற்கு பயிர் காப்பீடு மூலமாக இதுவரையில் 16 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.5,971 கோடி முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 193 உழவர் சந்தைகளை உருவாக்கியுள்ளோம். காய்கறிகள் மற்றும் பழங்கள் சாகுபடி செய்யும் 8,000 விவசாயிகள் அவர்களது விளைபொருட்களை உழவர் சந்தைகளின் மூலம் நேரடியாக நாளொன்றுக்கு 2,300 மெட்ரிக் டன் காய்கறிகள் விற்பனை செய்து வருகிறார்கள். இதன் மூலம் நாளொன்றுக்கு 3 இலட்சம் நுகர்வோர்கள் பயன்பெறுகின்றனர்.

வேளாண்மை - உழவர் நலத்துறையின் கீழ் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை, விதைச்சான்று வேளாண்மைப் பொறியியல் துறைகளுக்கென தனித் தனியாக இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ள துறைத்தலைவர்களாக நியமித்து சுமார் 25,000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். கிராமங்கள் தோறும் 5 அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியை பெருக்கி வருகிறோம்.

அதேபோல கரும்பு உற்பத்தியிலும், துவரை உற்பத்தியிலும் இந்திய அளவில் உயர்த்த சிறப்பு கவனம் செலுத்தி வருகிறோம்

தென்னையை பொருத்த வரையில் தனி வாரியம் அமைத்து, தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தென்னையில் வெள்ளை ஈ தாக்குதல் அதிகமாக காணப்பட்டது. மேலும் கேரளா வேர் வாடல் நோயும் காணப்பட்டது. இதற்கென தனிநிதி ஒதுக்கீடு செய்து தென்னை விவசாயிகளின் துயர் துடைக்கப்பட்டது.

கொப்பறை விற்பதில் உள்ள பல்வேறு சிரமத்திலிருந்து, கொப்பறை விலையினை உயர்த்தி தென்னை விவசாயம் ஊக்குவிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் 3 இலட்சம் விவசாயிகள் தென்னை விவசாயத்தை நம்பி உள்ளனர்.

வயது முதிர்ந்த தென்னை மரங்களை அகற்றுவதற்கு ஏதுவாக தென்னை விவசாயிகளுக்கு இலவசமாக புதிய ரக தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டு, உதவிகள் மற்றும் நிதியும் வழங்கி தென்னை வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறோம். 50,32,000 தென்னம்பிள்ளைகள் இலவசமாக தெனனை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, தமிழ்நாட்டில் விவசாயத்தை இந்திய அளவில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

12,525 கிராமங்களுக்கு கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி (KAVIADP) திட்டத்தின் மூலம் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிராமத்திற்கு குறைந்தபட்சம் 200 கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது. தென்னை விவசாயிகளுக்கு மாற்றுப் பயிர் மற்றும் மதிப்புக் கூட்டு தொழிற்நுட்பங்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் FPO உருவாக்கப்பட்டு அதன் மூலமாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தென்னை விவசாயிகளுக்கு இயற்கையின் மூலம் சவால்கள், பூச்சிநோய் தாக்கும் சவால் போன்ற சவால்கள் உள்ளது. இவற்றை எல்லாம் எதிர்த்து வாழக்கூடிய தன்னம்பிக்கையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பல சிறப்பான திட்டங்கள் மூலம் உருவாக்கி கொடுத்துள்ள காரணத்தினால்தான் தமிழ்நாடு விவசாயிகள் இந்திய அளவில் முன்மாதிரியாக சிறந்து விளங்குகிறார்கள்.

தமிழ்நாட்டில் முந்திரி சாகுபடியினை மேம்படுத்த, தனியாக முந்திரி வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முந்திரி சாகுபடி பரப்பு அதிகரிக்கவும், ஏற்றுமதி அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறந்த முந்திரியான பண்ருட்டி முந்திரிக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

உதகை சட்டமன்றத் தொகுதி நஞ்சநாடு கிராம ஊராட்சிக்குட்பட்ட பகல்கோடுமந்து சமுதாயக் கூடத்தில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமினை நேரில் பார்வையிட்டு, முகாமின் சிறப்பம்சம் பற்றி பொதுமக்களுடன் கலந்துரையாடினார். உடன் அரசு துறை அலுவலர்கள் மற்றும் உததை தெற்கு ஒன்றிய (மேற்கு) செயலாளர் ஜெகதீஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கீழ்குந்தா தீபக்பரதன், செந்தில்குமார் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழியை தலைமைச் செயலகத்தில் சந்தித்து தனது திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி திருவெறும்பூர் பகுதிக்கு உட்பட்ட, கணேஷ் நகர், உய்யகொண்டான் வாய்க்கால் கரைப்பகுதியில், அரசுக்குச் சொந்தமான நிலம் உள்ளது. அந்த இடத்தில் திருவெறும்பூரைச் சுற்றியுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தினசரி உழவர் சந்தை ஒன்றை அமைத்துத் தர ஆவன செய்யுமாறு கோரிக்கை மனுவை அளித்தார்.

கரூர் துயரச் சம்பவம் குறித்து உயர்நீதிமன்றம் நியமித்த சிறப்பு புலனாய்வுக் குழு விசாரித்து வருவதால்

சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டிய அவசியமில்லை!

உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வாதம்!

புதுடெல்லி, அக். 12-

கரூரில் விஜய் பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த துயரச் சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, கரூர் துயரச் சம்பவத்தில் சிறப்பு புலனாய்வுக் குழு முழுமையான விசாரணையை நடத்தி வருவதாக, தமிழ்நாடு அரசு சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தெரிவித்தார்.

விஜய் பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்தது மிகவும் கொடூரமானது என்றும், குறிப்பிட்ட இடத்தில் 12 மணிக்கு வருவதாக கூறிவிட்டு விஜய் மிக தாமதமாக வந்ததால் விபத்து நேரிட்டதாக அவர் கூறினார். மேலும், கரூர் துயரச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களையும், உயிரிழந்தவர்களின் உறவினர்களையும் இதுவரை நேரில் சென்று விஜய் பார்க்கவில்லை என்றும் அரசு வழக்கறிஞர் குற்றம்சாட்டினார்.

இந்த துயரம் சம்பவம் குறித்து விசாரிக்க உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி அஸ்ரா கார்க், முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி என்பதால் விசாரணை முறையாக நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி தெரிவித்தார்.

இதையடுத்து, வழக்கு பிற்பகலுக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் விசாரணைக்கு வந்தது. இதேபோல், தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மற்றொரு மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி,

உயர்நீதிமன்றம் திறமையான அதிகாரி தலைமையில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்துள்ளது என்றும், எனவே சி.பி.ஐ விசாரணை தேவை இல்லை என்று வாதிட்டார். அனைத்து வழக்குகளையும் சி.பி.ஐ., விசாரணைக்கு அனுப்பக்கூடாது என்றும், அரிய வழக்குகளை மட்டுமே சூழ்நிலைகளுக்கு ஏற்ப பரிந்துரைக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வின் தீர்ப்பு உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் மற்றொரு விசாரணையும் நடைபெற்று வருகிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைவரின் வலியையும் தமிழ்நாடு அரசு அறிந்துள்ளது என்றும் அவர் கூறினார். களநிலவரங்கள் அனைத்தையும் அறிந்தவர்கள் தமிழ்நாடு அரசின் அதிகாரிகள், எனவே ஒரு சிறந்த அதிகாரியின் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த சிறப்பு விசாரணை குழுவில் கரூர் சம்பவம் தொடர்பான விசாரணை தொடர வேண்டும்.

இவ்வாறு பல வழக்குகளை தொடர்ச்சியாக மாற்றிக் கொண்டிருந்தால் சிபிஐ முன்பு அதிக அளவிலான வழக்குகள் குவிந்து கிடக்கும். ஆனால் சிபிஐக்கு இருப்பதோ குறைந்த அளவிலான அதிகாரிகள்தான் என்று அபிஷேக் சிங்வி தெரிவித்தார்.

மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு அனுமதியுடன் உடற்கூறு ஆய்வு இரவில் நடத்தப்பட்டது என்றும் கூறினார். அப்போது, மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு அனுமதி மற்றும் உத்தரவின் அடிப்படையில் இரவில் உடற்கூறு ஆய்வு நடைபெறுவது வழக்கம் தான் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். 220 மருத்துவர்கள் அழைக்கப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளில் உடற்கூறு ஆய்வுகள் நடத்தப்பட்டது. போலீசார் பெருமளவுக்கு பாதுகாப்புக்கு நியமிக்கப்பிட்டிருந்தனர்.

நடிகர் என்பதால் மக்கள் கூட்டம் குவிந்தது. காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை உணவு, குடிநீர் இல்லாமல் மக்கள் மயங்கி விழுந்துள்ளனர். பேருந்திலிருந்து குடிநீரை வீசி எரிந்துள்ளனர் என்று தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர் வில்சன் தெரிவித்தார்.

கரூர் சம்பவம் தொடர்பாக சரியான தரவுகள் மற்றும் ஆதாரங்கள் பிரமாண பத்திரமாக தாக்கல் செய்யப்படவுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்தது. இதனை ஏற்ற உச்சநீதிமன்றம் வழக்கை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்து உத்தரவிட்டது.

தி.மு.க.
இளைஞர் அணி

புதிய நிர்வாகிகளுக்கான
2026 தேர்தல் பணி பயிற்சிப் பாசறைக் கூட்டம்

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. மண்டலம்–1 க்கு உட்பட்ட ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள பகுதிகளில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் கீழ்க்காணும் தேதியில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

நாள்	நேரம்	பகுதி	இடம்
12.10.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி	கலைஞர் அரங்கம், அண்ணா அறிவாலயம், தேனாம்பேட்டை.
	மாலை 4.00 மணி	ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி	மீனாட்சி நாராயணன் திருமண மண்டபம், ராகவன் தெரு, அண்ணா நெடும்பாதை, சூளைமேடு.

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 10.10.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாநகராட்சிகள் புதிதாக இணைக்கப்பட்ட கவிநாடு மேற்கு பகுதியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் முகாமில் கலந்து கொண்டு முகாமின் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதோடு, பொதுமக்களிடம் குறை நிறைகளை கேட்டறிந்து அரசு அலுவலர்களிடம் அது குறித்து முறையிட்டு விரைவாக அக்கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியதோடு, முகாமில் பயன் பெற்ற பயணாளர்களுக்கு அரசு ஆணைகளை டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்வின்போது மு.க.ராமகிருஷ்ணன், வெற்றிச்செல்லவன், பழனிசாமி, ஜெயந்தி, மாரிமுத்து மற்றும் அரசு அதிகாரிகள் பலரும் உடனிருத்தனர்.